# DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.462/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 5 | நாள் | : | 19.02.2026 |
| பெயர் | : | முத்துகிருஷ்ணன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19th day of February 2026.

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாம்பரம் மாநகர P18 தாழம்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது மருத்துவ விடுப்பில் உள்ளேன். நான் இதற்கு முன்பு ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது கடந்த 16.06.2022 ம் தேதி 14.00 மணிக்கு என்னுடைய தலைமையில் தலைமைக் காவலர் சுடலை மற்றும் இரண்டாம் நிலை காவலர் முரளிசங்கர் ஆகியோர்களுடன் ரோந்து சென்றபோது பாப்பான்குளம் கணபதி நடுநிலை பள்ளி அருகில் பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட எதிரிகளான பாலமுருகன் மற்றும் வடிவேல் ஆகிய இருவரும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை வைத்துக்

கொண்டிருந்தவர்களை சோதனை செய்து விசாரித்தபோது அவர்கள் வசம் தடை செய்யப்பட்ட 300 கிராம் எடையுள்ள கணேஷ் 701 என்ற புகையிலை பாக்கெட்டுகள் 14, சுமார் 120 கிராம் எடையுள்ள கூலிப் பாக்கெட்டுக்கள் 6, சுமார் 20 கிராம் எடையுள்ள கணேஷ் 701 பாக்கெட்டுக்கள் 25, மற்றும் ரொக்க பணம் ரூ.12,820/- ஆகியவை வைத்திருந்தனர். அதை அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருப்பதாக கூறியதால் இருவரையும் சம்பவ இடத்திலேயே கைது செய்தேன். பின்னர் சொத்துக்களையும் பணத்தையும் கைப்பற்றுவதற்கு அங்கு வைத்து ஒரு அத்தாட்சி தயாரித்தேன். அங்கு தனிநபர் எவரும் முன்வராததால் நாங்களே அதில் கையொப்பம் செய்தோம். பின்னர் மதியம் 3 மணிக்கு நிலையம் வந்து நிலைய கு.எண்.122/2022 பிரிவு 24(1), 6(பி) COTPA மற்றும் 77 JJ Act -ன் கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன் அசல் அத்தாட்சியையும், முதல் தகவலறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டு வழக்கினை என் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பின்னர் மாலை 4 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பொன்னுச்சாமி, ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். நான் தயாரித்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் மேற்படி சாட்சிகள் சுடலை, முரளிசங்கர், பொன்னுச்சாமி,ராஜா ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றிய சொத்துக்களையும்,

எதிரியையும் வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 300 கிராம் எடையுள்ள புகையிலை பாக்கெட்டுக்கள் (14 எண்ணம்) சா.பொ.1 ஆகும். 120 கிராம் எடையுள்ள கூலிப் பாக்கெட்டுக்கள் (6 எண்ணம்) சா.பொ.2 ஆகும். 20 கிராம் எடையுள்ள புகையிலை பாக்கெட்டுக்கள் (25 எண்ணம்) சா.பொ.3 ஆகும். ரூ.12,820/- தொகைக்கான புகைப்படம் அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் எனது விசாரணையை முடித்து 28.06.2022 ம் தேதி அதே சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய விசாரணையில் மலையாங்குளத்தைச் சேர்ந்த சாட்சிகள் பொன்னுச்சாமியும், ராஜாவும் சம்பவ இடத்தை நான் பார்வையிடும்போது உடனிருந்து கையொப்பமிட்ட விவரங்களை கூறியவற்றைத்தான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னுடைய ஆவணங்களில் நாங்கள் எத்தனை மணிக்கு புறப்பட்டு எங்கெங்கு சென்றோம் என்னென்ன வாகனங்களில் சென்றோம் சம்பவ இடத்தை எத்தனை மணிக்கு அடைந்தோம் என்ற விவரங்கள் ஆவணங்களில் துலங்காது. அத்தாட்சியை நான்தான் எழுதினேன். பார்வை மகசரில் சம்பவ இடத்தின் கீழ்புறம் போஸ்ட் ஆபிஸ் தென்புறம் வள்ளிநாயகம் ஸ்வீட் கடை எதிரே கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், கீழ்புறம் தெற்கே சுப்பையா கடை மற்றும் மேல்புறம் காமாட்சிநாதன் காலியிடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

வரைபடத்தில் காமாட்சிநாதன் காலியிடத்தில்தான் எதிரியை கைது செய்து பொருட்களை கைப்பற்றியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு கிழக்கே பள்ளிக்கூடம் அமைந்துள்ள நிலையில் நான் பார்வை மகசரில் அதை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் எனவே நான் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கவில்லை என்றும் நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் மதியம் 2 மணி சம்பவ இடத்தில் கடைகளும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகமும் உள்ளதால் ஆட்கள் வந்து செல்லும் இடம் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் யாரும் இல்லை. அவ்வாறு யாரும் இல்லை என்ற விவரத்தை சாட்சிகள் எவரும் என்னிடம் குறிப்பிட்டுக் கூறவில்லை. நான் பள்ளியின் பணிபுரியும் எவரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை. நான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல் பள்ளி மாணவர்கள் சிதறி ஓடியிருந்தால் நான் பள்ளிக்குச் சென்று அங்கு பணிபுரிபவர்களை விசாரித்திருப்பேன் என்றும் நான் கூறுவதுபோன்ற ஒரு சம்பம் நடைபெறவில்லை என்றும் பள்ளியில் பணிபுரிபவர்களை விசாரித்தால் அந்த விவரம் தெரிந்துவிடும் என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த எதிரியிடமிருந்து என்னென்ன சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகளையும் சொத்துக்களையும் அங்கிருந்து எவ்வாறு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம் என்பது வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால்

சரிதான். சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெறவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாததற்கு குறிப்பிடத்தக்க காரணம் ஏதும் இல்லை. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டதாக கூறுவதும் எதிரிகள் புகையிலை பொருட்களுடன் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்ததாக கூறுவதும் நான் எதிரிகளை சோதனையிட்டதாக கூறுவதும் அவர்களிடமிருந்து புகையிலை பொருட்களை கைப்பற்றியதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும் புள்ளி விவரக்கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

சாட்சி செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திரு.தினகரன் (Assistant Programmer), Principal District and Sessions Court, Chengalpat என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.19 17:59:56 +0530